[1984 மார்ச் 28

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்வித் தகுதி ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் பகுதிநேர எழுத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேர எழுத்தர்கள் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இவ்வளவு பேர்கள்தான் பகுதி நேர எழுத்தர்களாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ? அதற்கு ஏதாவது வரையறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுவும் அந்தக் கோரிக்கைகளில் ஒன்று. ஆகவே அதையும் பரிசீலனை செய்யும்.

ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள்.

490—(*வினா எண் 21661) திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சிப் பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் வாடகைக்கு விட கட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வருடக்கணக்காக அவைகளிலிருந்து வருமானம் இல்லாமலிருக்கக் காரணமென்ன ?

(இ) பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்க அறைகள் கட்ட திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) போதிய வாடகை கொடுக்க யாரும் முன் வராததால் காலியாக உள்ளது.

(இ) ஆம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த ஈரோடு நகராட்சி பேருந்து நிலையம் அண்மையில் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பேருந்து நிலையம். அதில் அறைகள் கட்டப்பட்டு வாடகைக்கு ஆள் வரவில்லை என்று சொன்னால் அது ஒரு ஆச்சரியமான விஷயம். என்னவென்றே புரியவில்லை. அவற்றை

வாடகைக்கு கொடுக்க குறிப்பிட்ட நபர்கள் வரவேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் பார்த்து வாடகைக்கு அல்லது குத்தகை மாதிரி நிர்ணயித்து கொடுக்க வேண்டும் என்ற முறை கையாளப் படுகிறதா ? அல்லது அரசாங்கமே பகிரங்கமாக அறிவித்து ஏலத்தில் ஏன் அந்தக் கடைகளை விடக் கூடாது ? அதற்கு வேண் டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள கேள்வி, முதல் தளத்தில் கட்டப் பட்டுள்ள கட்டடங்கள் பற்றியது. அவற்றை ஏன் வாடகைக்குக் கொடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். அவை காலியாக இருக் கின்றனவா அல்லது வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். அது ஆபீஸ் காம்ப்ளெக்ஸ், அவை கடை கள் அல்ல. ஆபீஸ் காம்ப்ளக்ஸ் என்பதில் ' ஏ ' பிளாக் 6,207 சதுர அடி. ஆபீஸுக்கு என்று கொடுப்பதற்காக இது கட்டப்பட் டது. அதேபோல் ' பி ' பிளாக் 7,403 சதுர அடி. ஆகவே ஒரேயடியாக எடுக்க வேண்டுமென்று சொன்னால்—சில விதி முறைகள் வைத்தோம். ஒரு சதுர அடிக்கு ரூ. 4 என்றளவில் மாத வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்று வைத்து 24-11-1982 அன்று இந்தக் கட்டிடம் முடிக்கப்பட்டது. பின்னால் பல்வேறு நேரங்களில் பிணைப்புத் தொகை எல்லாம் வைத்து உடனடியாக டெண்டர் கோரினோம். ஆனால் டெண்டர் கோரிய போது யாரும் முன்னுக்கு வரவில்லை. கடைசியாக 22-2-1984 அன்று டெண்டர் கோரப்பட்டது. அப்போதும் யாரும் வர வில்லை. இப்போது ரூ. 4 என்பதை ரூ. 2.50 என்று குறைத் திருக்கிறோம். அப்படிக் குறைத்த பின்னர் 22-2-1984 அன்று பல்வேறு விளம்பரங்கள் கொடுத்தும் யாரும் வரவில்லை. யாரா வது குறிப்பிட்ட நபருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. அங்கே இருக்கக்கூடிய நகராட்சிக்கும் அல்லது அங்குள்ள அதிகாரிகளுக்கும் கிடையாது. நீங்கள் கூட இப்போது விருப்பப்பட்டால் அந்த இடத்தை எடுத் துக் கொள்ளலாம். இப்போது ரூ. 2.50 என்று வைத்திருக் கிறோம். குறைந்த வாடகை வைத்திருந்தும்—உங்களைப் போன் றவர்கள் முன்னுக்கு வந்தால் கண்டிப்பாக நகராட்சிக்கு போது மான வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி ஒரு வியா பாரமும் செய்வதில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, எந்தக் கடையையும் ஏலத்தில் எடுக்க நான் தயாராயில்லை. அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். ஈரோட்டி லுள்ள இப்படிப்பட்ட ஒரு பெரிய மையத்தில் இப்படி வாடகைக்கு எடுக்க ஆள் வரவில்லை என்பது ஆச்சரியத்தோடு பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். இதற்குக் காரணம் என்ன என்பதை

ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பது என் கருத்து. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் கேட்ட கேள்வி, பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்ட உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறேன். பயணிகள் தங்க வசதியில்லை. இவ்வளவு இடம் கட்டியும் வாடகைக்கு ஆள் வரவில்லை, ஏன் ? அந்தப் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு, தண்ணீர் வசதி, சுகாதார வசதி போன்றவற்றிற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா ? அது எந்தக் காலத்திற்குள் செய்யப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே’ இந்த அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஒன்றரை ஆண்டுகளாக இதிலிருந்து வாடகை வரவில்லை. இதில் அங்கிருக்கக் கூடிய அதிகாரிகள் யாராவது மெத்தனம் காட்டியிருக்கிறார்களா என்பதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று, அப்படி கவனித்துப் பார்த்ததில் இருக்கக்கூடிய அதிகாரிகள் யாரும் மெத்தனம் காட்டவில்லை. அதற்குப்பின்னால் பல்வேறு நிலைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பின்பு 30-12-1982, 24-1-1983, 28-2-1983, 25-5-1983, 9-9-1983, 24-10-1983, 23-11-1983, 26-12-1983, 22-1-1984, 22-2-1984 ஆகிய தேதிகளில் நாம் விளம்பரப்படுத்தி இருக்கிறோம். யாரிடமிருந்தும் அதற்கான பிணைப்புத் தொகை வரவில்லை. இவ்வளவு நிலைகளிலும் வரவில்லை. ஆகவே, இருக்கக்கூடிய நிலையை அனுசரித்து, அவைகளுக்கு ஒரு பார்டிஷன் வால் அதாவது தடுப்புச் சுவர் போட்டு, பல்வேறு கட்டிடங்களாக மாற்றி, இந்த அமைப்பை உடனடியாக வாடகைக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமாதிரி கூட உடனடியாக விளம்பரம் செய்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பயணிகள் தங்குவதற்கு ஏற்ப, அங்கே அந்த வசதியுள்ள அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்ற முறையிலே இந்த நகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மதுராந்தகம் நகரத்திலிருந்து விடப்பட்டுள்ள நகரப் பேருந்துகள்.

491 (*வினா 19561) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரத்திலிருந்து எத்தனை நகரப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன ?